JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

Crl.M.P. No.631/2026 Date:22.07.2026

| | |
|---|---|
| பெயர் | திரு. கதிரவன் |
| கணவர் பெயர் | திரு. கேசவன் |
| முகவரி | எண்.26, பரிபூர்ண இல்லம், மதர் தெரசா தெரு, ஜாக் நகர், திருமுல்லைவாயல், சென்னை |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | |
| மதம் | |
| வயது | 34/2026 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 22nd day of July 2026.

**சத்தியபிரமாண வாக்குமூலம்:**

நான் இந்த வழக்கின் மனுதாரர் ஆவேன். கடந்த 2022 ஆம் ஆண்டு நான் Indian Software என்ற கம்பெனியில் வேலை செய்து வந்தேன். அப்போது என்னுடன் சேர்ந்து வேலை பார்த்து வந்த லிங்கேஷ்வரி ஜானகிராமன் என்ற பெண் எனக்கு அறிமுகமாகி நாங்கள் இருவரும் காதலிக்க ஆரம்பித்தோம். 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் தேதி பாண்டிசேரியில் உள்ள லிங்கேஷ்வரியின் வீட்டிற்கு நான் சென்ற போது லிங்கேஷ்வரி அம்மா உமாதேவி எங்கள் வீட்டில் இருந்து திருமணம் செய்வதை பற்றி பேசுவதற்கு வர சொல்லுங்கள் என்று என்னிடம் கூறினார். 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 14 ஆம் தேதி எங்கள் வீட்டில் இருந்து என்னுடைய அம்மா, அப்பா, அத்தை மற்றும் என்னுடைய நண்பர் கவின்முகில் ஆகியோர் லிங்கேஷ்வரி வீட்டிற்கு பெண் பார்க்க சென்றோம். அதன் பிறகு திருமண பேச்சு வார்த்தைகள் ஆரம்பித்து திருமணத்திற்கு தேவையான புடவை, துணிகள் வாங்குவதற்கு சென்றோம். அதன் பிறகு லிங்கேஷ்வரியின் அம்மா உமாதேவி திருமணம் மிக பிரமாண்டமாக நடைபெற வேண்டுமென்று கூறினார். இதற்காக நான் ICICI வங்கியில் லோன் வாங்குவதற்கு விண்ணப்பித்து அது Approval ஆகிவிட்டது. அதன் பிறகு 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் லிங்கேஷ்வரியின் அம்மா பொங்கல் விடுமுறைக்கு முன்பாக பவித்தரன் என்ற

ஆண் நபருடன் சேர்ந்து லிங்கேஷ்வரியை அழைத்துக்கொண்டு பாண்டிசேரிக்கு வீட்டிற்கு சென்றுவிட்டார்கள். அதன் பின்பு நான் லிங்கேஷ்வரிக்கு போன் செய்த போது அவர் போனை அட்டன் செய்யவில்லை. 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் தேதி லிங்கேஷ்வரியிடம் இருந்து ஒரு மெசேஜ் வந்தது. அதில் திருமணத்தை உடனே நிறுத்த வேண்டும் இல்லை என்றால் பவித்ரன் இறந்துவிடுவான் என்று குறுத்தகவல் எனக்கு வந்தது. இந்த குறுத்தகவல் வந்த சில நொடிகளில் தானாக அழிந்துவிட்டது. இந்த குறுத்தகவலை எனக்கு அனுப்பியது லிங்கேஷ்வரியின் அண்ணன் கிருபாகரன் அனுப்பினார் அதை அவர் தான் டெலிட் செய்தார். அதன் பிறகு லிங்கேஷ்வரி எனக்கு குறுத்தகவலில் வீட்டின் நிலைமை மோசமாக உள்ளது நான் யாரையும் திருமணம் செய்ய விரும்பல, யுவராஜ் மாதிரி இன்னொரு சூழ்நிலையை என்னால் ஏற்க முடியாது என்று Message வந்தது. யுவராஜ் என்பவர் 2021 ஆம் ஆண்டு லிங்கேஷ்வரிக்கு நிச்சயமிக்கப்பட்ட நபர் ஆவார். அந்த திருமணத்தை லிங்கேஷ்வரியின் அம்மா நிறுத்திவிட்டார். அதன் விளைவாக யுவராஜ் என்பவர் தற்கொலை செய்து இறந்துவிட்டார். ஜனவரி 15 ஆம் தேதி லிங்கேஷ்வரியை பார்க்க நான் பாண்டிசேரிக்கு சென்றேன். அப்போது என்ன பிரச்சனை என்று லிங்கேஷ்வரியிடம் கேட்டேன். அதற்கு அவர் திருமணத்தை நிறுத்தினால் என்ன பிரச்சனை நீ செய்வாய் எந்த மாதிரி நடந்துகொள்வாய் என்று தெரிந்துகொள்வதற்காக எனது அண்ணன் தான் அந்த Message அனுப்பினார். நான் மீண்டும் நாம் திருமணம் செய்துகொள்வதில் என்ன பிரச்சனை இருக்கு லிங்கேஷ்வரியிடம் கேட்ட போது எதுவாக இருந்தாலும் எனது அம்மாவிடம் கேட்டுக்கொள்ளுங்கள் என்று கூறிவிட்டா. லிங்கேஷ்வரியின் அம்மா உமாதேவியிடம் கேட்டால் எனது மகள் வந்தால் நீங்கள் கூட்டுட்டு போங்கள் என்று கூறினார். அதன் பிறகு நான் சென்னை வந்துவிட்டேன். அதன் பிறகு ஜனவரி மாதம் 25 தேதி லிங்கேஷ்வரி சென்னை வந்து என்னை சந்தித்தார். அப்போதும் என்ன பிரச்சனை என்று கேட்டால் அதை சொல்லவில்லை. பவித்ரன் பற்றி பேசவேண்டாம் என்று கூறிவிட்டார். அதன் பிறகு நான் லிங்கேஷ்வரியிடம் பவித்ரன் பற்றியை விவரங்களை கேட்கவில்லை. இந்த பிரச்சனை முடிந்த பிறகு சொல்லுங்கள் என்று கூறிவிட்டேன். அதன் பிறகு மார்ச் மாதம் லிங்கேஷ்வரியும் எனது அப்பாவும் போனில் பேசினார்கள். அதில் லிங்கேஷ்வரி பணப்பிரச்சனை உள்ளதாகவும் எங்களால் வங்கியில் லோன் வாங்க முடியவில்லை திருமணத்தை பற்றி என்ன சொல்கீறிர்கள் என்று கேட்ட போது எதுவாக இருந்தாலும் எனது அம்மாவிடம் பேசி கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார். அதன் பிறகு நானும், லிங்கேஷ்வரி, உமாதேவி, மற்றும் எனது அப்பா 4 பேரும் போனில் பேசும் போது திருமணத்தை நிறுத்த வேண்டும் என்ற

நோக்கத்துடன் மட்டுமே பேசினார்கள். ஆனால் என்ன பிரச்சனை என்று எங்களிடம் சொல்லவில்லை. நான் திருமணத்திற்காக வாங்கிய புடவைகளை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள் என்று லிங்கேஷ்வரியின் அம்மா என்னிடம் கூறிவிட்டார். நான் 2026 ஜனவரி மாதம் 28 ஆம் தேதி திருமுல்லைவாயல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் ஆனால் அதன் பிறகு பிப்ரவரி 21 ஆம் தேதி லிங்கேஷ்வரியின் குடும்பத்தினர் அனைவரும் காவல் நிலையம் வந்தார்கள். லிங்கேஷ்வரியின் குடும்பத்தாருக்கு திருமணம் செய்ய விருப்பம் இல்லை என்று கூறி என்னை அனுப்பிவிட்டார்கள். திருமணத்திற்காக வாங்கிய புடவைகளை போலீசார் வாங்கி வைத்துக்கொண்டு 10 நாட்கள் கழித்து என்னை மிரட்டி என்னிடம் கொடுத்துவிட்டார்கள். அதன் பிறகு முதலமைச்சரின் தனி பிரிவிற்கும் புகார் கொடுத்துள்ளேன். அதன்பிறகு போலீசார் என் வீட்டிற்கு வந்து எனது அப்பாவிடம் போலீசார் யாரும் மிரட்டவில்லை யாரும் தொந்தரவு செய்யவில்லை என்று எழுதி வாங்கிக்கொண்டு மீண்டும் இது போன்ற உங்கள் மகன் தொந்தரவு செய்தால் லிங்கேஷ்வரியின் சார்பாக பெண்கள் வன்கொடுமை பிரிவில் என்னை கைது செய்வேன் என்று போலீசார் எனது அப்பாவிடம் கூறிசென்றார்கள். மனுப்படி விசாரித்து தக்க உத்தரவு பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur